செய்தி வெளியீடு எண்: 113 நாள்: 21.02.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் முதன் முறையாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாகப்பட்டினத்திலும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்களைத் துவக்கி வைத்தார்கள்.

மீன்வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும், கடல்பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உயர்த்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழகத்தில் மீன்வளத்தைப் பெருக்கிட, நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மீன்வளக் கல்வியை ஊக்குவிப்பது அவசியமாகும். மீன்வளத்தைப் பெருக்கிட ஏதுவான கல்வியறிவை உருவாக்கிடும் வகையில் தமிழகத்தில் முதன் முறையாக மீன்வளப் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, தமிழகத்தில் முதன் முறையாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாகப்பட்டினத்திலும், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக்கத் தேவையான நில எடுப்புப் பணிகள் முடிவடைந்து தேவையான கட்டடங்கள் கட்டப்படும் வரை நாகப்பட்டினத்தில் வாடகை கட்டடத்திலும், திருவள்ளூர் மாவட்டம்

பொன்னேரியில் அரசு லோகநாதன் நாராயணசாமி கல்லூரி வளாகத்திலும் மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்கள் செயல்படும்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாகப்பட்டினம், மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் “இறால் வளர்ப்பில் சீரிய மேலாண்மை உத்திகள்” என்ற சான்றிதழ் படிப்புக்கும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தில் “அலங்கார மீன்வளர்ப்பு தொழில்நுட்பம்” என்ற மூன்று மாத கால சான்றிதழ் படிப்பிற்குமான மாணவர் சேர்க்கை முடிவடைந்து வகுப்புகள் தொடங்கும் நிலையில் உள்ளன. மீன்வளத் தொழில்நுட்ப நிலையங்களில், மீனவ சமூக மக்கள், சிறு தொழில் முனைவோர் மற்றும் மீன்வளத் துறையில் ஆர்வமுடையவர்களுக்குப் பயன்படும் வகையிலான படிப்புகள் தொடங்கப்படுவது தொழில் வளர்ச்சிக்கும், மீன்வள மேம்பாட்டிற்கும் பெரிதும் உதவிடும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 21.2.2013